JMC, Thiruvadanai-CC No.243/2025
Judgment Dated: 03.06.2026

**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாடானை.</u>**

முன்னிலை : திரு.J.அன்டோனி ரிஷன்தேவ், B.B.A., L.L.B(Hons),
நீதித்துறை நடுவர்,
திருவாடானை

2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 03 ம் நாள் புதன்கிழமை

**<u>ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 243/2025</u>**
<u>CNR No. TNRM17-001537-2025</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | வரிசை எண். | : | C.C.No.243/2025 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | : | திருவாடானை காவல் நிலையம்<br>குற்ற எண். 287/2023 |
| **எதிரிகளின் விபரம்** | | | |
| 3. | பெயர் | : | பூமிநாதன் (A1) |
| 4. | த/பெ. | : | மாரி |
| 5. | தொழில் | : | விவசாயம் |
| 6. | முகவரி | : | கருமொழி,திருவாடானை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம். தற்போது மாசிலாமணி காம்பவுண்ட்,தெற்கு தோட்டம், கருவம்பாளையம், திருப்பூர் |
| 7. | வயது | : | வயது 51/2023 |
| | பெயர் | : | மாணிக்கம்(எ) முத்துமாணிக்கம் (A2) |
| | க/பெ. | : | முனியாண்டி |
| | தொழில் | : | விவசாயம் |
| | முகவரி | : | 1/108,கருமொழி,<br>திருவாடானை வட்டம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | : | 48/2023 |
| 8. | சம்பவ நாள் | : | 02.11.2023 ம் தேதி 09.00 மணி |
| 9. | புகார் தேதி | : | 02.11.2023 ம் தேதி 13.00 மணி |
| 10. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | A1 – 16.11.2023<br>A2 – 14.11.2023 |
| 11. | எதிரிகள் பிணையில் | : | A1 – 16.11.2023 ம் தேதி காவல் நிலைய |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 11:59:26 +0530

| | | | |
|---|---|---|---|
| | விடுவிக்கப்பட்ட நாள் | | பிணையில் சென்றுள்ளார்.<br>A2 – 14.11.2023 ம் தேதி காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| 12. | கமிட்டல் உத்தரவு | : | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 05.12.2025 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 26.05.2026 |
| 15. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | : | 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, IPC, & 4 of TN Prohibition of Harassment of Women Act–ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b)(3counts), 323, IPC, & 4 of TN Prohibition of Harassment of Women Act–ன் கீழ் |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | அ.சா.1 – முதல் விசாரணை – 11.12.2025<br>குறுக்கு விசாரணை – 11.12.2025<br>அ.சா.2 – முதல் விசாரணை – 11.12.2025<br>குறுக்கு விசாரணை – 11.12.2025<br>அ.சா.3 – முதல் விசாரணை – 11.12.2025<br>குறுக்கு விசாரணை – 11.12.2025<br>அ.சா.4 – முதல் விசாரணை – 11.12.2025<br>குறுக்கு விசாரணை – 11.12.2025<br>அ.சா.5 – முதல் விசாரணை – 18.05.2026<br>குறுக்கு விசாரணை – 18.05.2026 |
| 18. | எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 26.05.2026 |
| 19. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச.311 பிரிவின்படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | செல்வி. முத்துமாரி |
| 22. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | : | திரு.ARM.சுரேஷ் |
| 23. | எதிரிகளின் கூற்று | : | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள் |

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 11:59:48 +0530

| | | | |
|---|---|---|---|
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 03.06.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 03.06.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | : | முடிவாக, 1, 2 எதிரிகள் பிரிவுகள் 294(b) (3 counts), 323 IPC, & 4 of TN Prohibition of Harassment of Women Act–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து 1, 2 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1, 2 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு 21.08.2025 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 26.05.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ARM.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம்:–

இவ்வழக்கின் புகார்தாரரின் மகனான சாட்சி 2 மகேந்திரனுக்கும் 1வது எதிரியின் மகள் சரண்யாவிற்கும் பழக்கம் ஏற்பட்டு சென்னையில் வசித்து வந்த நிலையில் இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதால் மகேந்திரன், சரண்யாவை விட்டுவிட்டு ஊருக்கு வந்திருந்தவருக்கு புகார்தாரர் திருமணம் செய்து வைக்க பெண் பார்த்து வந்ததை அறிந்த எதிரிகள் பூமிநாதன், முத்துமாணிக்கம் ஆகிய இருவரும் 02.11.2023 ம் தேதி காலை 9.00 மணிக்கு புகார்தாரரின் வீட்டிற்கு வந்து புகார்தாரரையும் சாட்சிகள் மகேந்திரன், பால்சாமி ஆகியோரை தேவடியா முண்டைகளா என் மகளை

விட்டுவிட்டு எப்படி வேறு பெண்ணை கல்யாணம் பண்ணுறீங்கன்னு பாக்குறேன் என்று அசிங்கமாக பேசி , புகார்தாரரை பெண் என்றும் பாராமல் எதிரிகள் இருவரும் கருவேல கம்பை எடுத்து எறிந்ததில் புகார்தாரரின் தலையிலும், வலது கணுக்காலிலும் இரத்த காயத்தை ஏற்படுத்தி சாதாரண காயத்தை உண்டாக்கி குற்றம் புரிந்ததாக 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323 IPC and 4 of TN Prohibition of Harassment of Women Act–ன் கீழ் திருவாடானை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. 1, 2 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் 1, 2 எதிரிகளுக்கு பிரிவு 207 Cr.P.C–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. 1, 2 எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், 1 ,2 எதிரிகள் முதல் நோக்கில் குற்றத்தினை செய்திருக்கலாம் என அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்ததால் 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b) (3 counts), 323 IPC, & 4 of TN Prohibition of Harassment of Women Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கி கூறி வினவிய போது, 1,2 எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அரசு தரப்பு சாட்சியமும், அரசு தரப்பு வழக்கறிஞரால் முடித்துக்கொள்ளப்பட்டது.

5. <u>**அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிகளின் சுருக்கம் : –**</u>

இவ்வழக்கின் புகார்தாரரின் மகனான சாட்சி 2 மகேந்திரனுக்கும் 1வது எதிரியின் மகள் சரண்யாவிற்கும் பழக்கம் ஏற்பட்டு சென்னையில் வசித்து வந்த நிலையில் இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதால் மகேந்திரன், சரண்யாவை விட்டுவிட்டு ஊருக்கு வந்திருந்தவருக்கு புகார்தாரர் திருமணம் செய்து வைக்க பெண்

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 12:00:18 +0530

பார்த்து வந்ததை அறிந்த எதிரிகள் பூமிநாதன், முத்துமாணிக்கம் ஆகிய இருவரும் 02.11.2023 ம் தேதி காலை 9.00 மணிக்கு புகார்தாரரின் வீட்டிற்கு வந்து புகார்தாரரையும் சாட்சிகள் மகேந்திரன், பால்சாமி ஆகியோரை தேவடியா முண்டைகளா என் மகளை விட்டுவிட்டு எப்படி வேறு பெண்ணை கல்யாணம் பண்ணுறீங்கன்னு பாக்குறேன் என்று அசிங்கமாக பேசி , புகார்தாரரை பெண் என்றும் பாராமல் எதிரிகள் இருவரும் கருவேல கம்பை எடுத்து எறிந்ததில் புகார்தாரரின் தலையிலும், வலது கணுக்காலிலும் இரத்த காயத்தை ஏற்படுத்தி சாதாரண காயத்தை உண்டாக்கினார்கள் என்பதேயாகும். மேற்படி சம்பவத்தை அ.சா.2 மகேந்திரன், அ.சா.3 பால்சாமி, மற்றும் சாட்சி ஆரோக்கியமேரி ஆகியோர்கள் பார்த்தார்கள்.

5(2) அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை என்றும் தான் வீட்டில் இருந்து வெளியே வரும்போது கால் தடுக்கி கீழே விழுந்ததில் தனக்கு காயம் எற்பட்டது என்றும் அதற்காக திருவாடானை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று கொண்டேன் என்றும் வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் புகாரில் உள்ள அ.சா.ஆ.1 கைரேகை தன்னுடையது தான் என்றும் தான் மருத்துவமனையில் இருக்கும் போது போலிசார் வெள்ளைதாளில் ரேகை வாங்கினார்கள் என்றும் எதற்காக வாங்கினார்கள் என்று தனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

5(3) அ.சா.2 தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது அம்மா ஆவார் என்றும் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

5(4) அ.சா.3 தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மனைவி ஆவார் என்றும் அ.சா.2 தனது மகன் ஆவார் என்றும் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் தனது மனைவி கால் தடுமாறி கீழே விழுந்ததில் தலையிலும், காலிலும் காயம் ஏற்பட்டு அதற்காக

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 12:00:27 +0530

திருவாடானை அரசு மருத்துவமனயில் சிகிச்சை பெற்றார் என்றும் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார்.

5(5) அ.சா.4 தனது சாட்சியத்தில் பார்வைமகசரில் உள்ள அ.சா.ஆ. 2 இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் காவல் நிலையத்திற்கு வேறு விசயமாக சென்றிருந்தபோது போலிசார் தன்னிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார்.

5(6) அ.சா.5 தனது சாட்சியத்தில் மேற்படி சம்பவம் தொடர்பாக கடந்த 02.11.2023 தேதி மதியம் 1.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் சுந்தரமூர்த்தி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது பால்சாமி மனைவி மாரிமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.3 புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேறப நிலைய குற்ற எண். 287/23, u/s 294(b),323 IPC, 4 of TNPHW ACT ஆக வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.4 முதல் தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார்.

5(7) பின்னர் வழக்கு கோப்பினை அவரது விசாரணைக்கு எடுத்து கொண்டு அதே நாள் மதியம் 2.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மகேஷ்வரன், குமார் ஆகீயோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ. 5 பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பின்னர் வழக்கின் சாட்சிகளான மாரிமுத்து, மகேந்திரன், பால்சாமி, ஆரோக்கியமேரி, மற்றும் பார்வைமகசர் சாட்சிகளை தனி தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(8) அவரது விசாரணையிலும் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மையனெ தெரியவந்தது என்றும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை பல இடங்களில் தேடி வந்த நிலையில் 14.11.2023 தேதி 20.00 மணியளவில் நிலையம் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான முத்துமணிக்கம் என்பவரை கைது செய்வதற்கான

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 12:00:37 +0530

தக்க காரணம் கூறி சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தக்க பிணையில் விடுவித்துள்ளார் என்றும் பின்னர் 16.11.2023 தேதி 13.30 மணியளவில் நிலையம் ஆஜரான எதிரி பூமிநாதன் என்பவரை கைது செய்வதற்கான தக்க காரணம்கூறி அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

5(9) இவ்வழக்கில் காயம்பட்ட மாரிமுத்து என்பவருக்கு சிகிச்சை அளித்த திருவாடானை அரசு மருத்துவமனை மருத்துவர் சபரிஜா என்பவரை விசரணை செய்து அவரிடமிருந்து காயம்பட்ட நபரான மாரிமுத்து என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய அ.சா.ஆ.7 காயச்சான்று பெற்று அவருடைய வாக்குமூலத்தையும் பெற்றுள்ளார். பின்னர் அவரது விசாரணையை முடித்து கொண்டு எதிரிகள் மீது u/s 294(b),323 IPC, 4 of TNPHW ACT கீழ் திருவாடானை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்துளளார்.

6. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து 1, 2 எதிரிகளுக்கு பாதமகமாக உள்ள சங்கதிகள் குறித்து 1 ,2 எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் படித்துக் காட்டி விளக்கிக்கூறி வினவிய போது 1 , 2 எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகள் சொல்வது பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்றும் 1, 2 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்தார்கள். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b) (3 counts), 323 IPC, & 4 of TN Prohibition of Harassment of Women Act ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

**தீர்வு**

8. இவ்வழக்கின் புகார்தாரரின் மகனான சாட்சி 2 மகேந்திரனுக்கும் 1 வது எதிரியின்

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 12:00:44 +0530

மகள் சரண்யாவிற்கும் பழக்கம் ஏற்பட்டு சென்னையில் வசித்து வந்த நிலையில் இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதால் மகேந்திரன், சரண்யாவை விட்டுவிட்டு ஊருக்கு வந்திருந்தவருக்கு புகார்தாரர் திருமணம் செய்து வைக்க பெண் பார்த்து வந்ததை அறிந்த எதிரிகள் பூமிநாதன், முத்துமாணிக்கம் ஆகிய இருவரும் 02.11.2023 ம் தேதி காலை 9.00 மணிக்கு புகார்தாரரின் வீட்டிற்கு வந்து புகார்தாரரையும் சாட்சிகள் மகேந்திரன், பால்சாமி ஆகியோரை தேவடியா முண்டைகளா என் மகளை விட்டுவிட்டு எப்படி வேறு பெண்ணை கல்யாணம் பண்ணுறீங்கன்னு பாக்குறேன் என்று அசிங்கமாக பேசி , புகார்தாரரை பெண் என்றும் பாராமல் எதிரிகள் இருவரும் கருவேல கம்பை எடுத்து எறிந்ததில் புகார்தாரரின் தலையிலும், வலது கணுக்காலிலும் இரத்த காயத்தை ஏற்படுத்தி சாதாரண காயத்தை உண்டாக்கி குற்றம் புரிந்ததாக அரசு தரப்பில் சொல்லப்பட்ட நிலையில், வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை என்றும் தான் வீட்டில் இருந்து வெளியே வரும்போது கால் தடுக்கி கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும் அதற்காக திருவாடானை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று கொண்டேன் என்றும் வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் புகாரில் உள்ள கைரேகை தன்னுடையது தான் என்றும் தான் மருத்துவமனையில் இருக்கும் போது போலிசார் வெள்ளைதாளில் ரேகை வாங்கினார்கள் என்றும் எதற்காக வாங்கினார்கள் என்று தனக்கு தெரியாது என சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது அரசு தரப்பு வழக்கை முழுமையாக பாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

9. மேலும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.1 தனது அம்மா ஆவார் என்றும் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சிமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவக்கூடியதாக இல்லை.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 12:00:52 +0530

10. மேலும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.3 அ.சா.1 தனது மனைவி ஆவார் என்றும் அ.சா.2 தனது மகன் ஆவார் என்றும் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் தனது மனைவி கால் தடுமாறி கீழே விழுந்ததில் தலையிலும், காலிலும் காயம் ஏற்பட்டு அதற்காக திருவாடானை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவக்கூடியதாக இல்லை.

11. மேலும் பார்வைமகசர் சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியான அ.சா.4 பார்வைமகசரில் உள்ள அ.சா.ஆ.2 இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் காவல் நிலையத்திற்கு வேறு விசயமாக சென்றிருந்தபோது போலிசார் தன்னிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது இவ்வழக்கில் புலன் விசாரணை முறையாக மேற்கொள்ளப்பட்டதா என்ற பெரும் சந்தேகத்தினை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

12. மேலும் அ.சா.1 அ.சா.2, அ.சா.3, அ.சா. 4 ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாகிவிட்ட போதிலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் பல்வேறு மாண்புமிகு உயர்நீதிமன்றங்கள் பிறழ்சாட்சிகளின் சாட்சியங்களில் வழக்கிற்கு உதவக்கூடிய பொருண்மைகள் ஏதேனும் இருந்தால் அதனை கருத்தில் எடுத்துக் கொள்ளலாம் என பல்வேறு தீர்ப்புகளின் மூலம் தெரிவித்துள்ளது, ஆனால் இவ்வழக்கில் பிறழ்சாட்சிகள் ஆகியுள்ள அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 சாட்சியங்களை பரிசீலிக்கும்போது அதில் அரசு தரப்பிற்கு உதவக்கூடிய வகையில்

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 12:01:02 +0530

எந்த சாட்சியமும் அமையாததால் அவை அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் பாதகமாக அமைந்துள்ளது.

13. மேலும் இவ்வழக்கின் புகார்மனுவை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து, 1 ,2 எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரம் குறித்து அ.சா.5 சாட்சியம் அளித்துள்ள போதிலும், 1,2 எதிரிகளின் குற்றச்செயல்களை இணைக்கக்கூடிய வகையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் ஏதும் அமையாத நிலையில், அரசு தரப்பில் சொல்லப்பட்டது போல மேற்படி குற்றச் சம்பவம் நடைபெற்றதா என எழும் சந்தேகத்தின் பலனை 1 , 2 எதிரிகளுக்கு சாதகமாக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. எனவே இறுதியாக, 1, 2 எதிரிகள் பிரிவுகள் 294(b) (3 counts), 323 IPC, & 4 of TN Prohibition of Harassment of Women Act ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து 1 , 2 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1, 2 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

15. இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் நேரடியாக அதை கணினியில் வைத்து சரிபார்க்கப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 03 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 12:01:11 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

JMC, Thiruvadanai-CC No.243/2025
Judgment Dated: 03.06.2026

அரசு தரப்பு சாட்சிகள் :–

1. அ.சா.1 திருமதி.மாரிமுத்து
2. அ.சா.2 திரு.மகேந்திரன்
3. அ.சா.3 திரு.பால்சாமி
4. அ.சா.4 திரு.குமார்
5. அ.சா.5 திரு.பூமிநாதன்(சிறப்பு சார்பு ஆய்வாளர்)

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 02.11.2023 | புகார்மனுவில் உள்ள அ.சா.1 ன் கைரேகை |
| 2. | அ.சா.ஆ.2 | 02.11.2023 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4 ன் சாட்சி கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | 02.11.2023 | புகார்மனு |
| 4. | அ.சா.ஆ.4 | 02.11.2023 | முதல் தகவல் அறிக்கை |
| 5. | அ.சா.ஆ.5 | 02.11.2023 | பார்வை மகஜர் |
| 6. | அ.சா.ஆ.6 | 02.11.2023 | மாதிரி வரைபடம் |
| 7. | அ.சா.ஆ.7 | 02.11.2023 | அ.சா.1 ன் காயச்சான்று |

அரசு தரப்பு சான்று பொருட்கள் :–

–– இல்லை ––

1, 2 எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் சான்று பொருட்கள்:–

––இல்லை––

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 12:01:17 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

குறிப்பு :–

1. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது 1 ,2 எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
3. எந்த ஒரு சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.